OS.16/2019

Dated.17.08.2023

Name : செல்வி

Time: 02.30 PM

7, 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. நான் ஒரே ஒரு சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2. வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. 1. 1/2 ஏக்கர் அளவுள்ள சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு தேவையான விபரங்களை வழக்கறிஞரிடம் நான் தான் தெரிவித்தேன்.

3. தாவா சொத்தில் 7, 8 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்யும் போது நாங்கள் ஆட்சேபிக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் சென்று கேட்டோம். அதற்குள் அவர்கள் வேலி அடைத்து விட்டார்கள். அவ்வாறு நாங்கள் கேட்டு சுமார் 7, 8 வருடங்கள் இருக்கும். நாங்கள் கேட்டதற்கு எங்கள் இடத்தை 7, 8 பிரதிவாதிகள் கிரையம் வாங்கியதாக கூறினார்கள்.

4. வேலி அடைத்து சுமார் 6 மாதங்களுக்குள் நாங்கள் கிரையம் செய்து கொடுத்த விபரம் பற்றி வில்லங்க சான்று பார்த்து தெரிந்து கொண்டோம். உடனே நாங்கள் 1ம் பிரதிவாதியான எங்கள் அம்மாவிடம் சென்று கேட்டதற்கு கிரையம் கொடுக்கவில்லை என்று தெரிந்து கொண்டோம்.

5. நகல் எடுத்து பார்த்து எனது தாயார் கிரையம் கொடுத்த விபரத்தை தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. என் அம்மா கிரையம் கொடுக்கவில்லை. நான் பிறந்திலிருந்தே செங்கப்படை கிராமத்தில் தான் வசித்து வருகிறேன். நான் குடியிருக்கும் வீட்டிலிருந்து சுமார் 2 கி.மீ. தூரத்தில் தாவா சொத்து அமைந்துள்ளது.

6. தாவா சொத்து தவிர என் அப்பாவின் பெயரில் வேறு எந்த சொத்துக்களும் இல்லை. எனது தகப்பனாரின் பூர்வீக வீட்டை எனது அண்ணனும், அம்மாவும் அனுபவம் செய்து வருகிறார்கள். மேற்படி வீடு எனது அண்ணனுக்கு ஒதுக்கப்பட்டது. அதில் எனது அம்மாவும் வசித்து வருகிறார்.

7. எனது அப்பாவிற்கு பாத்தியமான காலி மனை எதுவும் ஊரில் இல்லை. தாவா சொத்துக்கள் புஞ்சை நிலம் என்றால் சரிதான். தாவா சொத்தின் மதிப்பு எனக்கு தெரியாது. எனது தகப்பனாரின் பூர்வீக வீடு சுமார் 5 இலட்சம் பெறும். தாவா சொத்துக்களில் 7, 8 பிரதிவாதிகள் காம்பவுண்ட் சுவர் கட்டி வேலி அடைத்து

விட்டார்கள்.

8. வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து நாளது தேதிவரை தாவா சொத்து எங்களது அனுபவத்தில் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து 7, 8 பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்துக்களையும் இதர சொத்துக்களையும் பொறுத்து எங்களுக்குள் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல.

9. அவ்வாறு பாகம் பிரித்துக்கொண்டபோது விலை குறைவான தாவா சொத்துக்கள் எனது தாயாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கும் எனது சகோதரர்களுக்கும் விலை மதிப்பு கூடுதலாக உள்ள சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

10. எனது தாயார் தனது பாகமான தாவா சொத்துக்களை விற்பனை செய்வதற்கு 2ம் பிரதிவாதியை பவர் ஏஜெண்டாக நியமித்தார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு 29.11.2010ல் கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல.

11. 3 முதல் 6 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை 8ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து விட்டார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் தற்போதைய அனுபவத்தில் இல்லை என்பதால் தான் எங்களால் நான்குமால்கள் குறிப்பிட இயலவில்லை என்றால் சரியல்ல.

12. எனது தாயார் எழுதி கொடுத்த பவர் பத்திரத்தை இரத்து செய்ய நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் காலங்கடந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

13. 2வது இலக்க சொத்தின் சர்வே எண் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கில் எந்த பரிகாரமும் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.